செ.வெ.எண்: 85/2017 நாள்: 31.01.2017

# தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
# மாவட்ட இயக்க மேலாண்மை அலகு
# கன்னியாகுமரி மாவட்டம்

## பத்திரிக்கை செய்தி

## மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வங்கி நேரடி கடன், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான தனிநபர் கடன் ரூ.50 இலட்சத்து 40 ஆயிரம் கடன் வழங்கும் நிகழ்ச்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம், ஊரக ஏழை மக்களுக்கான வலுவான உயிரோட்டத்துடன் கூடிய மக்கள் அமைப்புகளை உருவாக்கி, நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பல்வேறு சேவைகளையும் முறையாக பெற வழிவகை செய்து, வாழ்வாதாரத்தை உயர்த்தி குடும்ப வருமானத்தைப் பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

இன்று (31.01.2017) நடைபெற்ற மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வங்கி நேரடிக்கடன் திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 1 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.12 இலட்சமும், நாகர்கோவில் நகராட்சி பகுதியை சார்ந்த 4 சுயஉதவிக் குழுவிற்கு ரூ.22.55 இலட்சமும், நகர்புற பகுதியை சார்ந்த 3 சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.23.00 இலட்சமும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடனாக ரூ.1.98 இலட்சமும், சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு ரூ.1.00 இலட்சமும், சிறந்த 3 சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.0.75 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.50,40,000/- (ஐம்பது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.த.கெட்ஸி லீமா அமலினி, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் திரு.எம்.ஆறுமுகம், திரு.ப.அந்தோணிசிலுவை, திருமதி.எம்.கலைச்செல்வி, திரு.எம்.கே.பிச்சையப்பா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் தொகுதி வழிநடத்துநர்கள் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.